# ‘தமிழ் இலக்கிய மின்னாக்கத்தில் அனைவரின் பங்களிப்பும் தேவை’

முஹம்மது ஃபைரோஸ்

சிங்கப்பூரின் 50 ஆண்டு கால தமிழ் இலக்கியத்தை மின்னாக்கம் செய்யும் பணி மும்முரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளையில், அந்தப் பணி செவ்வனே நிறைவேறுவதற்கு உதவ நிதி திரட்டும் முயற்சியை தமிழ் மின் மரபுடைமைக் குழு தொடங்கி உள்ளது.

அந்த முயற்சியை பிரதமர் அலுவலக அமைச்சரும் உள்துறை மற்றும் வர்த்தக தொழில்துறை இரண்டாம் அமைச்சருமான எஸ். ஈஸ்வரன் நேற்று அதிகாரபூர்வமாகத் தொடங்கி வைத்தார்.

வெஸ்ட் கோஸ்ட் தொகுதியின் தீபாவளிக் கொண்டாட்டத்தின் போது அவர் நிதி திரட்டு முயற்சியைத் தொடங்கி வைத்தார்.

“தமிழ் மின்மரபுடைமைத் திட்ட நிதியைத் தொடங்கி வைப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்தத் திட்டம் நாட்டுக்கு சமூகத்தின் அன்பளிப்பு என்பதால் முடிந்தவரை சிறியவர் முதல் பெரியவர் வரை நிறைய பேர் இத்திட்டத்துக்கு நிதியளிக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

“சமூக அமைப்புகளும் ஆசிரியர் சமூகமும் சிறப்பு முயற்சி எடுத்து இந்த மிக உன்னதமான திட்டத்துக்கு ஆதரவளிக்குமாறு அனைத்துத் தரப்பினரையும் கேட்டுக்கொள்கிறேன்,” என்று அமைச்சர் ஈஸ்வரன் தமது உரையில் குறிப்பிட்டார்.

தமிழ் மின்மரபுடைமைத் திட்டத்திற்கு நிதி வழங்குவதற்கு முன் வருமாறு இந்திய சமூகத்தினரை கேட்டுக்கொண்டார் திட்டப் பணிக்குழுவின் தலைமை ஒருங்கிணைப்பாளர் திரு அருண் மகிழ்நன்.

“பொதுவாக, நிதி திரட்டுவதற்குத் தொழிலதிபர்களையோ வசதி உடையோரையோ அணுகுவது வழக்கம். ஆனால், இத்திட்டத்திற்காக நிதி வழங்குவதற்கு இந்திய சமூகத்தில் உள்ள அனைவரையும் அழைக்கிறோம். இவ்வகையில் சிங்கப்பூரின் 50வது பிறந்தநாளையொட்டி நாட்டிற்கு வழங்கக்கூடிய பரிசாக இந்தத் திட்டம் அமைகிறது.

இதில் இந்திய சமூகத்தின் பல்வேறு தரப்பினரின் பங்களிப்பும் உள்ளடங்க வேண்டும் என்பதற்காக இந்த அணுகுமுறை எடுக்கப்பட்டுள்ளது,” என்று விவரித்தார் அவர்.

அடுத்த ஆண்டு சிங்கப்பூர் தனது 50வது பிறந்தநாளைக் கொண்டாடவிருக்கும் வேளையில் சிங்கப்பூர் இந்திய சமூகம் அதன் அர்த்தமுள்ள அன்பளிப்பாக, 50 ஆண்டுகால சிங்கப்பூர் தமிழ் இலக்கியத்தை மின்மயமாக்கி நாட்டிற்கு வழங்கவிருக்கிறது.

தமிழ் மின்மரபுடைமைத் திட்டம் 1965ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரையில் பதிப்பிக்கப்பட்ட சிங்கப்பூர் தமிழ் இலக்கிய நூல்களை மின்வடிவமாக்கி அவற்றைப் பல தலைமுறைகளுக்குப் பயனுள்ளதாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் வகுக்கப்பட்டுள்ளது.

அந்தக் காலகட்டத்திற்கு முன்னரும் பின்னரும் உள்ள நூல்களைப் பிற்காலத்தில் மின்மயமாக்கவும் இத்திட்டம் வழி வகுக்கும்.

தமிழ் மின்மரபுடைமைக் குழு வழிநடத்தும் இத்திட்டத்திற்கு தேசிய நூலக வாரியம், தேசிய மரபுடைமைக் கழகம், தேசிய கலைகள் மன்றம், சிங்கப்பூர் புத்தக மேம்பாட்டு மன்றம் ஆகிய அமைப்புகள் ஆதரவு வழங்குகின்றன.

சிங்கப்பூர் தமிழ் இலக்கிய வரலாறு 1800களின் இறுதியில் தொடங்கியபோதும், தமிழ் நூல்களை மின்னிலக்கமாக்குவதற்கு இதுவரை பெரிதாக முயற்சிகள் இடம்பெறவில்லை. இதனால் பல தமிழ் நூல்கள் முற்றிலுமாக மறைந்து போகக்கூடிய அபாயம் உள்ளது.

ஆக, இத்திட்டம் 50 ஆண்டு கால சிங்கப்பூர் தமிழ் இலக்கியப் படைப்புகளை மின்னாக்கம் செய்து வருங்கால சந்ததியருக்கு ஒரு பொக்கிஷமாகத் திகழும்.

நூல்களை மின்னாக்கம் செய்வதற்கான செலவைத் தேசிய நூலக வாரியம் ஏற்றுக்கொண்டு உள்ளது. ஏனைய ஏற்பாட்டுச் செலவுகளுக்கு இந்திய சமூகத் திடமிருந்தும் அரசு சார்ந்த நிறுவனங்களிடமிருந்தும் திரட்டப்படும் நிதி பயன்படுத்தப்படும்.

இத்திட்டத்திற்காக நிதி வழங்க விரும்பும் பெரியவர்கள் குறைந்தது $50 நன்கொடை வழங்கலாம். 18 வயது அல்லது அதற்கு கீழ் உள்ள மாணவர்கள் குறைந்தது $2 நன்கொடை வழங்கலாம். காசோலை அல்லது கடன் பற்று அட்டை மூலம் மட்டுமே நன்கொடை ஏற்றுக்கொள்ளப்படும்.

நன்கொடை கிடைத்ததும் கொடுத்தவருக்கு நன்றிக் கடிதம் அனுப்பப்படும். இத்திட்டத்தின் இணையப் பக்கத்தில் நன்கொடை வழங்கியவர்கள் பட்டியலும் இடம் பெறும்.

“சிறு துளி பெரு வெள்ளம் எனும் கூற்றுக்கேற்ப, நமது சமூகத்தின் மனமுவந்த ஆதரவோடு நம் இலக்கை நம்மால் எட்ட முடியும்,” என்று நம்பிக்கை தெரிவித்தார் திரு ஈஸ்வரன்.

நன்கொடை வழங்குவதற்கான மேல் விவரங்களுக்கு திருமதி மகாதேவி பாலசுந்தரம் என்பவரை devibt@gmail.com எனும் மின்னஞ்சல் வழி தொடர்பு கொள்ளலாம் அல்லது http://www.singaporetamil.sg/ எனும் தமிழ் மின்மரபுடைமைத் திட்ட இணையத்தள முகவரிக்குச் செல்லலாம்.



வெஸ்ட் கோஸ்ட் சமூக மன்றத்தில் நேற்றிரவு தமிழ் மின்மரபுடைமைத் திட்ட நிதி திரட்டை பிரதமர் அலுவலக அமைச்சர் எஸ். ஈஸ்வரன் (வலமிருந்து 2வது) தொடங்கி வைக்கிறார். **படம்: திமத்தி டேவிட்**

mohdfair@sph.com.sg